**புதுச்சேரி அரசு**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை**
**நில அளவை மற்றும் பதிவேடு இயக்ககம்**
**சாரம், புதுச்சேரி**

நாள். 02.08.2021.

# பத்திரிக்கைச் செய்தி

நில அளவை மற்றும் பதிவேடுகள் இயக்ககம் மூலம், மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் (CSS-DILRMP) புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 129 வருவாய் கிராமங்களின் நில வரி திட்ட பதிவேடுகள் ஏற்கனவே கணினிமயமாக்கப்பட்டு, கடந்த 2014 ஆண்டு முதல் **"பொது சேவை மையங்களின்"** மூலம் ரூபாய் 40/- கட்டணத்தில் நில வரி திட்ட நகல் , பட்டா நகல், புலப்பட நகல் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது .

இந்த சேவையை மேலும் எளிமையாக்கி **www.nilamagal.py.gov.in** என்கிற இணையதள முகவரி மூலம் பொதுமக்கள் எந்நேரத்திலும் / எப்பொழுதும் (24X7) அவர்களுடைய கணினி மூலமாகவும் மற்றும் அலைபேசி மூலமாகவும் பார்ப்பதற்கும், டிஜிட்டல் கையொப்பமிட்ட நில வரி திட்ட நகல், பட்டா நகல், புலப்பட நகல் போன்றவைகளை இணையதளம் மூலம் ரூபாய் 50/- கட்டணம் செலுத்தி பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த சேவைக்கான, **துவக்க விழா இன்று (02.08.2021 காலை 11.00 மணியளவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர், புதுச்சேரி அவர்களின் தலைமையில், தலைமைச் செயலகத்தில் உள்ள ஆலோசனைக்கூடத்தில் (Conference Hall) நடைபெற்றது.**

இவ்விழாவில் சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள், தலைமைச் செயலர், மாவட்ட ஆட்சியர் மற்றும் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். மேலும் இந்த இணைய சேவையை பெரும் வழிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

DIRECTORATE OF SURVEY & LAND RECORDS Puducherry

2/8/2021

**(M.S. ரமேஷ்)**
**இயக்குனர்**
**நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,**
**புதுச்சேரி**

**புதுச்சேரி அரசு**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை**
**நில அளவை மற்றும் பதிவேடு இயக்ககம்**
**சாரம், புதுச்சேரி**

## இணையதளத்தில் நில வரி திட்ட நகல், பட்டா நகல், புலப்பட நகல் போன்றவைகளை பார்ப்பதற்கு மற்றும் பெறுவதற்கான வழிமுறைகள்

வழிமுறை-**1**: **nilamagal.py.gov.in** என்கிற இணையதள முகவரியில் நுழையவும்.

↓

வழிமுறை-**2**: நில ஆவணங்களை பார்ப்பதற்கு மற்றும் பெறுவதற்கான விருப்பத்தை தேர்வு செய்யவும்.

↓

வழிமுறை-**3**: சம்பந்தப்பட்ட பிராந்தியம், தாலுக்கா, வருவாய் கிராமம், நிலத்தின் வகை, பட்டா எண், அல்லது சர்வே எண் போன்ற விவரங்களை பூர்த்தி செய்யவும்.

↓

வழிமுறை-**4**: நில ஆவணங்களை பார்க்கவும் (View for Reference). மேலும் அதிகாரப்பூர்வ ஆவணத்தை (Apply for Official Copy) பெற வேண்டுமெனில் விருப்பத்தை தேர்வு செய்யவும்.

↓

வழிமுறை-**5**:அதன்பின், ரூபாய் 50/- இணையதள கட்டணம் செலுத்துவதற்கான விருப்பத்தை தேர்வு செய்யவும். பிறகு ஒரு முறை பயன்படுத்தக்கூடிய கடவு சொல் **(OTP)** குறுஞ்செய்தியாக கைபேசிக்கு அனுப்பப்படும்.

↓

வழிமுறை-**6**: ஒரு முறை பயன்படுத்தக்கூடிய கடவு சொல்லை **(OTP)** பதிவு செய்து அதிகாரப்பூர்வமான ஆவணத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

DIRECTORATE OF SURVEY & LAND RECORDS Puducherry

2/8/2024

**(M.S. ரமேஷ்)**
**இயக்குனர்**
**நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,**
**புதுச்சேரி**